**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**S.நாகராஜன்** **K.சந்திரசேகரன்,B.A** **B.தியாகராஜன், M.Com.,**
**தலைவர்** **பொதுச்செயலாளர்** **நிதிச்செயலாளர்**

பதிவு அஞ்சல் மூலமாக கடித எண்: 107/19
10-06-2019

பெறுதல்:
செயலாளர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தமிழ்நாடு மின்சாரவாரியம்,
எண்:144, அண்ணாசாலை.
சென்னை – 2.

ஐயா,

பொருள் : தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம் - தீர்வுகாணப்படவேண்டிய பிரச்சனைகள் குறித்து பேச்சு வார்த்தைகள் நடத்திட வேண்டுகோள் - பிரச்சனைகளில் தீர்வுகாண முன்வரவில்லை எனில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட உள்ளது குறித்த முன்அறிவிப்பு.

*******

எங்களது சங்கத்தின் உயர்மட்டக்குழுக்கூட்டம் 09-06-2019 அன்று சென்னையில் சங்கத்தலைவர் திரு.S.நாகராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மேற்கண்ட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்று தங்கள் தகவலுக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தீர்மானத்தில் பட்டியலிடப்பட்டுள்ள பத்து பிரச்சனைகள் மற்றும் கோரிக்கைகள் குறித்து எதிர்வரும் 01-07-2019ம் நாளுக்குள் எங்கள் சங்கத்துடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி தீர்வுகாண வேண்டுகின்றோம்.

மேற்கண்ட எங்களது வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்படவில்லையெனில் 01-08-2019ம் நாள்முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தை துவக்குவது என முடிவெடுக்கப்பட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மிகப்பெரிய பொதுத்துறை நிறுவனமான மின்துறையில் நிலவிவரும் தொழில் அமைதியை காப்பாற்றுகின்ற வகையில் தீர்மானத்தில் வேண்டியுள்ளபடி எங்களது சங்கத்துடன் உடனடியாக பேச்சுவார்த்தைகள் நடத்தி பிரச்சனைகளில் தீர்வுகாண நிர்வாகம் முன்வருமென பெரிதும் நம்புகின்றோம்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள,

பொதுச்செயலாளர்

இணைப்பு : 1 தீர்மானம்.

நகல் :
1. தலைமைப்பொறியாளர் / பணிமைப்பு.
2. தொழில்உறவு அலுவலர் / மின்சாரவாரியம் ஆகியவர்களுக்கு தகவலுக்காக.